REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 24உ செவ்வாய் (7—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 25உ புதன் (8—6—55) [இதழ் 305

என்ன நியாயமோ?

சென்ற 1953-ம் ஆண்டு ஜூலை திங்கள் 15-ம் தேதியன்று தி.மு. கழகம் நடத்திய இரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட கீழப்பாவூர் தோழர் எஸ். பி. சாமி அவர்கள், தென்காசி சப்-மாஜிஸ்திரேட்டால் 15 ரூபாய் அபராதம் அல்லது 12 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். அபராதம் கட்ட மறுத்துத் தோழர் சாமி 12 நாட்கள் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

ஆனால் அண்மையில், அவர் ரூ. 15 அபராதமும் கட்ட வேண்டுமெனக் கூறி போலீசார் 'ஜப்தி வாரண்டு' கொண்டு வந்தனர். சென்ற 26—5—55 அன்று, அந்த 'ஜப்தி வாரண்டை'க் காட்டி தோழர் சாமியிடமிருந்து போலீசார் ரூ 15 அபராதத் தொகையை வசூலித்துச் சென்றிருக்கின்றனர். (ந—தி)

கவர்னர் பதவி: ஒரு ஆபாச முரண்பாடு!

பேராசைத் திருடனிடம் விவாதம் பயன் தருமா?

நம் மக்கள்—திராவிடர்கள்! நமக்கு ஆட்சி—தோன்ற வேண்டும்!

சென்னை சிறப்புக் கூட்டத்தில் சம்பத் விளக்கம்

"பாண்டுங்கில் நடைபெற்ற ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டில், பண்டித நேரு, 'உலகத்தில் ஏகாதிபத்திய முறை எந்த உருவில் இயங்கினாலும், அதனைச் சகித்துக்கொள்ள முடியாது,' என கனல் கக்கப் பேசியிருக்கிறார். ஏகாதிபத்திய ஆட்சி முறையை எதிர்ப்போருக்கு ஆதரவும், அன்பும் தர ஆசிய—ஆப்பிரிக்க மக்கள் தயாராயிருக்க வேண்டுமெனக்கூடக் கூறியிருக்கிறார்; ஆனால்....! அதே நேரு பண்டிதர் இரண்டாண்டுகளுக்கு முன் சென்னைக்கு வந்திருந்தார்; அவர் வந்தபோது, இந்த நாட்டில் ஜனநாயக முறைக்கு குழி தோண்டிய ஆச்சாரியார்—ஆறு உயிர்களைக் குடித்ததுடன், ஆயிரக்கணக்கானோரை சிறைக்கூடத்திலும் தள்ளிவிட்டு, அடக்குமுறை வெறியாட்டம் ஆடிய ஆச்சாரியார்—ஆட்சிபீடத்திலமர்ந்திருந்தார்; அவரை அருகில் வைத்துக்கொண்டு பண்டிதர் பேசினார்—"ஆச்சாரியாரின் அடக்குமுறை போதாது; ஆச்சாரியார் தமது எதிர்ப்பாளர்களிடம் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டிருக்கிறார்'—என்ற 'பாணி'யில், ஆச்சாரியார் நடத்திய அடக்குமுறை வெறியை ஆதரித்துக் குரல் எழுப்பினர்.

"பண்டிதர் எத்தனை புனிதமான இலட்சியம் பற்றிப் பேசினாலும்—அந்தப் புனிதமான இலட்சியம் நம் வரையில் இருந்தால் போதும்; அந்தப் புனிதமான இலட்சியம் பற்றியும், தத்துவம் பற்றியும் இதரர் பேசினால் அவர்களை அடக்கி ஒடுக்கிவிட வேண்டும்—என்றுதானே எண்ணுகிறார்? இந்த ஆபாசமான முரண்பாடு வரலாறு எங்கணும் தொடர்ந்து நீடித்துவருகிறது.

"நாம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூறுவது, வடநாட்டவர் மீது நமக்குள்ள விரோதத்தை வெளிப்படுத்தவும், விஷத்தைக் கக்கவுமல்ல; 'வெள்ளையனே வெளியேறு,' என்று கூறியபோது, வெள்ளையர் மீதிருந்த வெறுப்பை வெளிக்காட்டவா காங்கிரசார் அவ்வாறு கூறினார்கள்? 'நிச்சயமாக இல்லை,' என்று அவர்களே கூறியிருக்கிறார்கள்; 'இந்தியர்கள் வாழ வேண்டும்; அதற்கு, வெள்ளையர் வெளியேறியே ஆகவேண்டும்,' என்று கூறினார்கள்; அதேபோலத்தான், நாம் இன்று, 'திராவிடர்கள் வாழ வேண்டும்; அவர்கள் வாழ வேண்டுமானால் வடநாட்டவர் வெளியேறியே தீர வேண்டும்,' என்று கூறுகிறோம்; அப்படிக் கூறுவது எப்படி வடநாட்டவர் மீது நமக்குள்ள விரோதத்தை வெளிப்படுத்துவதாகும்? எப்படி துவேஷமாகும்?

"வெறுப்பையும், விரோதத்தையும் வெளிப்படுத்தத்தான் போகிறோம்; இன்றல்ல; நாம்—திராவிடர்கள் வீழ்வதில்தான் அவர்கள் வாழ நினைக்கிறார்கள் என்றால், அன்று நம்மைக் காப்பாற்றிக்கொள்ள, நமக்கு அவர்கள் மீதுள்ள வெறுப்பையும், விரோதத்தையும் வெளிப்படுத்துவோம்.

"கடந்த மூன்றாண்டு காலமாக நாம் கூறிவருகிறோம்—ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டவர் வஞ்சிக்கப்பட்டிருக்கும் கொடுமை பற்றி ஆளப்படுகிற தென்னாட்டவராகிய நாம், ஆளுகிற வட நாட்டவரைக் கேட்கிறோம்—அவர்கள் மீது குற்றஞ்சாட்டுகிறோம்; அரசியல் தெரிந்தவர்களைக் கேட்கிறேன்—ஜனநாயக சம்பிரதாயம் என்னவாயிற்று?—ஆளுபவர்களை ஆளப்படுபவர்கள் கேட்கும்போது, ஆளுபவர்கள் பதில் சொல்வதுதானே பண்பு? ஜனநாயக சம்பிரதாயம்?

"100-க்கு 99 பேர் ஒரு கருத்தை ஆதரிப்பவர்களாயிருந்தாலும், எஞ்சியுள்ள ஒருவனுக்கு, அந்த 99 பேர்களின் கருத்தை விமர்சிக்கவும், கண்டிக்கவும், தன் கருத்துப் பக்கம் மாற்றுக் கருத்தினரைத் திருப்பவும் உரிமை உண்டு என்பதுடன், அந்த நூறாவது மனிதனின் விமர்சனத்திற்கு—கண்டனத்திற்கு பதில் தரவேண்டும் என்பதுதானே ஜனநாயக சம்பிரதாயம்? ஆனால் இதுவரை நம் குற்றச் சாட்டிற்கு பதில் தந்திருக்கின்றனரா வடநாட்டவர்?

"மந்திரி சுப்பிரமணியம், பெரியநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாத அரங்கிலே கூறினார்—'வடநாட்டில்தான் பெரும் திட்டங்கள் எல்லாம்; தென்னாட்டில் எதுமில்லை; இந்த நிலை நீடித்துக்கொண்டே சென்றால், இந்திய அரசியலில் ஆபத்தான கொந்தளிப்பு ஏற்படும்,'—என்று! எங்கு அதைச் சொல்ல வேண்டுமோ அந்த இடத்தில் அதைச் சொன்னார்.

"பெண்கள் சார்பிலும், காங்கிரஸ் சார்பிலுமாக ஆவடியில் நடைபெற்ற மாநாட்டில் அம்புஜத்தம்மாள் கூறினார்கள், இதுபற்றி; அவர்களும், எங்கு கூற வேண்டுமோ அங்கு—வடநாட்டுத் தலைவர்கள் அத்தனை பேரும் மேடையில் அமர்ந்திருக்கும்போது கூறினார்; இப்படி, நம குரலை ஒலிக்கும் நல்ல பகைவர்களும இருக்கத்தான் செய்தனர்; என்றாலும், வடநாட்டு ஆட்சி பீடத்தவர், பதில் தரவில்லையே என்? ஜனநாயக சம்பிரதாயப்படி, பண்டித நேரு பதில் தந்திருக்க வேண்டாமா? வரவேற்புரையில் கூறப்பட்ட ஒரு விஷயம் பற்றி மட்டும் எதுவும் கூறாமல், வேறு எல்லா விஷயங்கள் பற்றியும் வடநாட்டவர்கள் பேசியிருக்கிறார்கள்.

"நான் இன்று அறை கூவிச் சொல்லுகிறேன்—'வடநாட்டவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள்; அவர்களின் வஞ்சகச் செயலுக்கு அவர்களால் நியாயமான சமாதானம் கூற முடியாது'—என்று!

"எதையாவது பதில் தரலாம் அவர்கள்; ஆனாலும் தரவில்லை. அவர்களின் இந்த மௌனத்திற்கு இங்குள்ள சிலர், 'பெரிய மனிதத் தன்மை' கற்பிப்பார்கள்—கற்பிக்கக்கூடும்; ஆனால், அந்தப் 'பெரிய மனிதத்தன்மை, ஜனநாயகத்திற்கு ஒத்துவராதது,' என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

"பிரயாணம் புறப்படுகிறோம்—இரயில் வருகிறது; மனைவியுடனும், குழந்தையுடனும் ஒரு பெட்டியில் ஏறுகிறோம்; அங்கு 5 பேர் உட்கார வேண்டிய இடத்தில் ஒரு முரடன் படுத்திருக்கிறான்; அவன் தூங்கவில்லை; விழித்துக்கொண்டு அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு, வாயில் எதையோ 'அசை' போட்டபடி நீட்டிய கால் நீட்டியபடி படுத்திருக்கிறான்; நம்மைப் பார்த்ததும், நியாயமாகவே எழுந்து இடம்தர வேண்டும், அவன்; ஆனால், அப்படிச் செய்யவில்லை; அவன் பண்பைப் புரிந்துகொண்ட நாம், 'ஐயா! ஐந்து பேர் உட்கார வேண்டிய இடத்தில் தாங்கள் ஒருவரே நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டிருக்கிறீர்களே! நாங்கள் நின்று கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா?' என்றும் கேட்கிறோம்; அப்போதும் அந்த முரடன், ஏதும் சொல்லாதவனாக இருந்தால், அவனுடைய மௌனத்தை என்னவென்று பெயரிட்டு அழைப்பது? 'போக்கிரித்தனம்' என்று அதற்குப் பெயரே தவிர வேறென்ன?

"அதைப்போலத்தான் நாம் கேட்டுவருகிறோம்—இந்த 'முடி சூடா மன்னர்' என்றழைக்கப்படும் வடநாட்டுத் தலைவரை; அவரோ, பதில் தரக்காணோம்!

"ரயிலில் படுத்திருக்கும் முரடனுக்கு, 'பிறர் நின்றுகொண்டிருக்கையில் நாம் படுத்திருப்பது அநியாயம்,' என்பது தெரியாமல் போனால் அல்லவா, அவனிடம் நியாயம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கலாம்? எல்லாம் தெரிந்துகொண்டே படுத்துக்கிடக்கும் அவனிடம்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

தீண்டாமை குற்றச் சட்டச் சுவரொட்டி!

மேலும் வழங்கக் கூடாது எனத் தடை!

'தீண்டாமையை எந்த உருவத்தில் அனுசரித்தாலும், அது குற்றமாகக் கொள்ளப்பட்டு தண்டனை தரப்படும்,' என சட்டம் இயற்றப்பட்டுள்ளது; அந்தச் சட்டம் இத்திங்கள் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வந்தும் இருக்கிறது.

சட்டத்தின் உள்ளடக்கத்தைப் பொது மக்களுக்கு உணர்த்தும் நோக்குடன் சென்னை அரசாங்கம் ஒரு சுவரொட்டிப் படத்தைத் தயாரித்தது.

அதில், தீண்டாமையை அனுசரிக்கும் ஒரு மனித உருவத்திற்கு உச்சிக் குடுமியும், பூநூலும், கீழ்பாச்சும இருப்பதாக வரையப்பட்டு இருக்கிறது.

அந்த உருவம், 'தன் சாதி'யைத்தான் குறிப்பிடுகிறது என ஆங்கில இதழான 'இந்து' தீர்மானித்துக்கொண்டு, 'தாக்கும் பிரசாரம்' என தலைப்பிட்டு, சென்னை அரசாங்கத்தையும், சாதி ஒழிக்கப்படவேண்டும் எனக் கூறி பாடுபட்டுவரும் நம் போன்ற நபர்களைக் குறித்தும், 'பிடிசாபம்' என்ற பாணியில் தலையங்கம் தீட்டியது.

பார்ப்பன உலகில் புயல் வீசத் தொடங்கியது; சென்னை அரசாங்கத்தை தவிடு பொடியாக்கி விடுவதாக, பார்ப்பனர், படை திரட்ட முன்வந்தனர்.

பார்ப்பனரின் பொதுப் படை திரண்டு விட்டதோ இல்லையோ அது நமக்குத் தெரியாது; ஆனால், சென்னை அரசாங்கம் நடுங்கத் தொடங்கி விட்டது என்பது மட்டும் விளக்கமாகத் தெரிந்துவிட்டது.

மேற்படி சுவரொட்டிப் படத்தை மேலும் வழங்கக் கூடாது எனக் கட்டளை பிறப்பித்துவிட்டது, சென்னை அரசாங்கம்!

ஒரேயடியாக மேற்படி சுவரொட்டியை திரும்பப் பெற்றுக்கொள்வதா இல்லையா என்பது குறித்து இனிதான் முடிவுகட்ட இருக்கிறதாம் சென்னை அரசாங்கம்.

அதற்கான இடைக்காலத்தில் மேற்கூறிய ஏற்பாட்டைச் செய்ய சென்னை அரசாங்கம் தீவிரமான முடிவிற்கு வந்திருக்கிறது. ஏனோ?

மாஸ்கோ செல்லும் 'பாதை'யில் நேரு

பிரேக், ஜூன் 6—

ரஷ்யா செல்வதற்காகப் புறப்பட்ட இந்தியப் பிரதமர் நேரு இன்று, செக்கோஸ்லாவேக்கியத் தலைநகர் பிரேக் நகரையடைந்தார்.

விமான நிலயத்தில் நேருவிற்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை தெரிவிக்கப்பட்டு, பின்னர் செக்கோஸ்லாவேகியாப் பிரதமர் நேருவை வரவேற்றார்.

நாசருடன் பேச்சுவார்த்தை

பிரேகை விட்டுப் புறப்பட்ட நேரு, எகிப்து தலைநகர் கெய்ரோ வந்தடைந்து, எகிப்து பிரதமர் கர்னல் நாசருடன் சுமார் 75 நிமிட நேரம் பேச்சுவார்த்தைகள் நடத்தினாராம்.

எகிப்து பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து எவ்விதத் தகவலும் தர நேரு மறுத்துவிட்டிருக்கிறார்.

மாஸ்கோவில்!

மாஸ்கோ சென்றடைந்த இரண்டு தினங்களுக்குப் பின்—அதாவது வருகிற வியாழனன்று—ரஷ்யப் பிரதமர் புல்கானின், நேருவிற்கு அரசாங்க வரவேற்பளிப்பாராம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 7—6—'55 செவ்வாய்

விளம்பரத் திட்டம்!

★

தனி நபர்களின் பொருள் உற்பத்திச் சுரண்டல் முறை இறுதிக் கட்டத்தைப் பெற்று நீண்டகாலம் ஆகிவிட்டது. அந்த முறைக்கு இனி புத்துயிர் அளிப்பது என்பதும் மனித அறிவுக்கும் ஆற்றலுக்கும் உட்பட்ட செயலாகவுமில்லை.

பொருள் உற்பத்திச் சுரண்டல் முறை, தனது துவக்கக் காலத்தில், அதுவரை தனி மனிதர்கள் அனுபவித்து வந்த பலவித உரிமைகளையும் விரிவடையச் செய்ததுடன், விசையுள்ளனவாகவும் செய்தது. அறிவியல் வளர்ச்சியையும் ஒன்றுக்குப் பலவாகப் பெருக்கிற்று. ஆனால், தனது இறுதிக் கட்டத்தில், தானே ஒரு காலத்தில் பெருக்கிய அறிவியல் துறைகளையும், உரிமைக் கோட்பாடுகளையும் மனமுவந்து சிதைக்க, அப்பொருள் உற்பத்திச் சுரண்டல் முறை துணிவு பெற்றும் இருக்கிறது.

தொழில் போட்டி இருப்பது, பொருள் உற்பத்திச் சுரண்டல் முறையின் மூலக் கோட்பாடாகும். அந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக்கொள்ளப்படுகிறவரையில்தான், மேற்படி சுரண்டல் முறை பெரும்பான்மையான மக்களின் நலன்களை வளர்த்துக் காக்கும் ஒரு சிறந்த அமைப்பாக இருந்துவரும். அப்படியே என்றென்றும் நிலையாக நீடித்து இருந்துவர அமைப்பால் இயலுவதில்லை. காலப்போக்கில் தன்னில் தானாக ஏற்பட்டு வருகிற கழுத்தறுப்புத் தொழில் போட்டியிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, பெரும்பான்மையினர் நலன்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டிய கட்டாயத்திற்கு, அம்முறை வந்துவிடுகிறது.

பொருள் உற்பத்திச் சுரண்டல் முறையினுல் உள்ளடக்கமாக இருப்பது தனி நபர்களின் இலாப வேட்டையேயாகும். கழுத்தறுப்புப் போட்டி ஏற்படுகின்ற கட்டத்தில், இலாப வேட்டையின் விளைவு சுருங்கிவிடுகிறது. அப்படி சுருங்கும் நெருக்கடியிலிருந்து, மேற்படி இலாப வேட்டையை எப்பொழுதும் போல் பயன் தரக்கூடியதாகத் திருத்தி அமைக்க சில நிபுணர்கள் முயற்சித்துள்ளனர். அவர்கள் பொருள் உற்பத்தியின் முறையையும் கைவிடாமல், அம்முறையின் நோக்கமாகக் கொள்ளப்பட்ட சிலரின் இலாப வேட்டையையும் புறக்கணிக்காமல், பொருள் உற்பத்திக்கான திட்டங்களைத் தீட்டத் தொடங்கினர். அந்தத் திட்டம்தான் பாசிஸ்ட் பொருள் உற்பத்தித் திட்டங்களாகப் பரிணமித்தன.

பொருள் உற்பத்திச் சுரண்டல் முறையில் இருந்த இலாப வேட்டை அல்லது சுரண்டல் போக்கை அறவே அகற்றிவிட்டு, பெரும்பான்மையான மக்களின் நலன்களைக் கட்டிக் காக்க, அம்முறையை மாற்றி அமைத்தனர். அவர்களும் திட்டங்கள் தீட்டினர்; கணிசமான அளவு வெற்றியும் பெற்றனர்.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டுவகை திட்டங்களையும் செயலாற்ற, பலம் பொருந்திய மத்திய அரசாங்கம் இருந்தே ஆக வேண்டும். இந்த முக்கியத் தேவையைத்தான், சென்ற கால வரலாறும் நிகழ்காலச் சம்பவங்களும் வலியுறுத்துகின்றன.

தனி நபர்களின் உரிமைகள் பலம் பொருந்திய ஒரு மத்திய அரசாங்கத்தில் பெரிய அளவில் கட்டுப்படுத்தப்படுவது கட்டாயமாகும். உரிமைதான், மனிதனுக்குரிய தேவைகளிலெல்லாம் முதன்மையான தேவை எனக் கொள்ளுபவர்கள், பலம் பொருந்திய ஒரு மத்திய அரசாங்கத்தை விரும்பவும் மாட்டார்கள்—ஏற்றுக் கொள்ளவும் ஒருப்படார்கள்.

பலம் பொருந்திய ஒரு மத்திய அரசாங்கம் உண்மையான மக்களாட்சி முறையில் இயங்க முடியாது. மக்களாட்சியின் கல்லறையிலிருந்துதான் ஒரு பலம் பொருந்திய அரசாங்கம் உருவாக முடியும்.

பலம் பொருந்திய அரசாங்கம் காண வேண்டும் என்ற பேரவாவிற்கு இந்தியத் துணைக் கண்டப் பிரதமர் நேரு, தனது அறிவைப் பறிகொடுத்திருக்கிறார். அதனால்தான் அவர் அடிக்கடி, பலம் பொருந்திய ஒரு அரசாங்கத்தின் அருமை பெருமைகள் குறித்து விளக்கம் தந்தவண்ணமும் உள்ளார்.

பலம் பொருந்திய அரசாங்கத்திற்கு விளக்கம் கூறுவதோடும் பண்டிதர் நின்றுவிடுவதில்லை. அதைச் சிறப்பித்துக் கூறும் அதே நேரத்தில், மக்களாட்சி முறையின் மாண்பு பற்றியும் பறைசாற்றுகிருர்.

பொருளாதாரத் துறையில் பண்டிதரின் திட்டம் வெறும் விளம்பரத் திட்டமாக இருப்பதுபோன்றே, அரசியல் துறையிலும் அவருடைய கருத்து வெறும் விளம்பர முனைப்பாகவே இருந்துவருகிறது. அவருக்குள்ள 'உலகப் புகழ்' இந்த உண்மையை மறைத்துவிடக்கூடிய ஆற்றல் பெற்றிருக்கவில்லை.

உலக வரலாற்றுப் புகழ் ஏட்டில் பண்டிதர் இடம் பெறுவார் என்பதில் ஐயமில்லை. ஆனால், அதே நேரத்தில், இந்தியத்துணைக்கண்டத்து மக்கள் அவரால் பெற்ற இன்னல்களும், அந்த ஏட்டில் இடம் பெற்றே தீரும். அப்பொழுதுதான் அனைவராலும் உணரப்படும், காஷ்மீர் பண்டிதர் பெற்ற உலகப் புகழுக்கு, இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் தந்த விலையின் மதிப்பு. அதுவரையில், பண்டிதரின் 'திக்விஜயம்' கண்டு, தேசீய ஏடுகள் பூரிக்கத்தான் செய்யும்! காங்கிரஸ் கனவான்கள் பக்க மேளம் கொட்டத்தான் செய்வர்! சாதாரண மக்களோ, வாய்பிளந்து மருட்சியுடன் நோக்கத்தான் செய்வர்!

இதுவரை கைதானேர் 2,066!

பெப்சுவிலிருந்து 1,000 தொண்டர்கள் வருவர்

பஞ்சாப் மொழிவழிக் கிளர்ச்சி வலுக்கிறது

சாந்திகார், ஜூன் 4—

பஞ்சாப் மொழிவழி மாநிலக் கோரிக்கைக்காக அகாலி தளத்தவர் நடத்தும் உரிமைக் கிளர்ச்சியை ஒட்டி இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஜூன் 3-ந் தேதி மாலைவரை 2,066 என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜலந்தரிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில், கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,650 என்று வெளிவந்திருந்ததை பஞ்சாப் சர்க்கார் மறுத்திருக்கிறது.

அமிர்தசரசில் மட்டும்!

அமிர்தசரஸ், ஜூன் 4—

அகாலிதளக் கிளர்ச்சியை ஒட்டி இன்று கைது செய்யப்பட்ட 40 பேர்கள் உட்பட அமிர்தசரசில் மட்டும் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 1,223 என்று தெரிகிறது.

பெப்சு மாநிலத்தில் உள்ள அகாலிதளத்தவர், வரும் வாரங்களில் ஆயிரம் தொண்டர்களை மாநில நகரங்களில் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்காக அனுப்பி வைப்பார்கள் என்று தெரிகிறது.

வாடகைக் கட்டுப்பாடு சட்டம் நீடிப்பு

வருகிற ஜூலை திங்களில் மீண்டும் கூட இருக்கும் சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை மேலும் நீடித்து வைப்பதற்கென அமைச்சர் சண்முக ராஜேஸ்வர சேதுபதி மசோதா ஒன்று கொண்டுவருவார் என்று கூறப்படுகிறது.

தற்போது அமுலிலிருக்கும் வாடகைக் கட்டுப்பாடு சட்டம் வருகிற செப்டம்பர் திங்கள் இறுதியுடன் முடிவுறுகிறது.

புதுவையில் 'மக்கள் முன்னணி'

புதுச்சேரி, ஜூன் 5—

புதுவை மாநிலத்திலுள்ள பல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த சுமார் 558 பிரதிநிதிகள் புதுவையில் கூடி 'மக்கள் முன்னணி' என்றபெயருடைய புதிய கட்சியை உருவாக்கியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

புதுவை மாநிலத்தில் விரைவில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரசை முறியடிக்க வேண்டுமென்பதே இந்த 'மக்கள் முன்னணி'யின் நோக்கமாம்.

விவசாய வசதிகள், நிலமில்லாத ஏழைகளுக்கு சர்க்கார் நிலங்களை வழங்குதல், குடியானவர்களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு, விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்வது என்பவைகளே இம் முன்னணியின் தேர்தல் கொள்கைகள் என்றும் தெரிகிறது.

இக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்க 15 பேர் கொண்ட குழு ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

இந்த முன்னணியில் கம்யூனிஸ்டு கட்சியும் இணைந்துள்ளதென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியைப் பரப்ப...!

பிரதேச குழுக்கள் நியமனம்

இந்திய யூனியனில் இந்தி மொழி பேசப்படாத பகுதிகளில், இந்தி மொழியைப் பரப்பும் வேலை எவ்வளவு தூரம் நடைபெற்றுள்ளது என்பதைக் கண்டறிய மத்திய சர்க்கார் கல்வி இலாகா, நான்கு பிரதேசக் குழுக்களை அமைத்திருக்கிறது.

இந்த நான்கு பிரதேசங்களில், சென்னை, திரு-கொச்சி, ஆந்திரா, மைசூர், ஐதராபாத், குடகு ஆகியவை கொண்டது தெற்குப் பிரதேசமாகும்.

இந்த 4 குழுக்களும், தத்தம் பிரதேசங்களில் சுற்றுப்பயணம் செய்து இந்தி மொழியைப் பரப்புவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அதற்கான திட்டங்களைத் தெரிவிக்குமாம்.

இவ்வாண்டு அக்டோபர் திங்கள் முடிவிற்குள், இந்த 4 குழுக்களும் தங்கள் தங்கள் அறிக்கைகளை மத்திய சர்க்காரிடம் சமர்ப்பிப்பர் என்று தெரிய வருகிறது.

இந்தத் தெற்குப் பிரதேசக் குழுவில், திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம், ஆர். டி. சின்ஹாடிங்கர், பண்டித பாலகிருஷ்ண சர்மா நவீன், குழுவினர் செல்லுகின்ற மாநிலத்தின் பிரதிநிதி ஒருவர் ஆக நால்வர் அடங்கியிருக்கின்றனர்.

சந்தன எண்ணெய் தொழிற்சாலைகள்

இரண்டில் ஒன்றை மூடிவிட மைசூர் சர்க்கார் முடிவு

போதுமான சந்தன மரம் கிடைக்காததே காரணமாம்

மைசூர், ஜூன் 5—

மைசூர் மாநில சர்க்கார் நடத்துகிற இரண்டு சந்தன எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைகளில் அவை இரண்டும் முழு அளவுக்கு வேலை செய்ய முடியாமையினுல், ஒரு தொழிற்சாலையை மூடிவிட சர்க்கார் உத்தேசித்திருப்பதாக, மைசூர் தொழிலமைச்சர் சென்னவாசப்பா கூறியிருக்கிருர்.

ஒன்று மைசூரிலும், மற்றென்று ஷிமோகாவிலும் உள்ளன. போதுமான சந்தன மரம் கிடைக்காமையினுல், அவை இரண்டும் முழு அளவு உற்பத்தியில் ஈடுபட முடியவில்லை என்றும், எனவே ஒரு தொழிற்சாலை மூடப்பட்டால் மற்றென்று முழுஅளவு வேலை செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

எந்தத் தொழிற்சாலையை மூடுவதென்பது பற்றி இன்னும் சர்க்கார் முடிவெடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

எண்ணெய்க் கிணறு 'எரிமலை'யாயிற்று?

டாக்கா, ஜூன் 3—

சில்ஹெட்டிற்கு அருகாமையிலிருந்த எண்ணெய்க் கிணற்றுப் பகுதி திடீரென 'சிறிய எரிமலை' போலாகிவிட்டதாம்! அந்த 'எரிமலை' 400 அடி உயரத்திற்குத் தீப்பிழம்புகளைக் கக்கினதாகவும், அடிக்கடி அதிர்ச்சிகள் ஏற்பட்டு மண்ணும் கற்களும் 50 அடி உயரம் வரையிலும் மேலே வாரியிறைக்கப்படுவதாகவும் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

இந்தப் பகுதி, எண்ணெய்க் கிணறுகள் இருப்பதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இடமாம். இப்பகுதியில் உள்ள சோதனைக் கிணறுகளில் கிளம்பின எண்ணெயும், வாயுவும் கடந்த 5, 6 தினங்களாக எரிந்துகொண்டிருப்பதாக நம்பப்படுகிறதாம்.

இந்த எரிமலை நிகழ்ச்சியின் காரணமாக, சுமார் 50 லட்சம் ரூபாய்க்குச் சமமான கிணறு தோண்டும் இயந்திரங்கள் பாழாகிவிட்டன என்றும், அப்பிரதேசத்தைச் சுற்றி தனக்குச் சொந்தமான சுமார் 66 ஏகர் நிலத்தையும் எண்ணெய்க் கம்பெனி காலி செய்துவிட்டதெனவும் கூறப்படுகிறது.

இந்தப் பகுதியினின்றும் கிளம்புகின்ற குமுறல் ஓசை சுமார் 14 கல் தொலைவுகளுக்கப்பாலிருக்கும் சில்ஹெட்டில்கூடக் கேட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

இந்தப் பிரதேசத்திற்கருகில் பொது மக்கள் எவரும் வருவதை தடை செய்யும் நோக்குடன அப்பகுதி முழுமையிலும் 144 ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்!

1955 மார்ச்சு மாதத்துடன் முடிவடைந்த நான்கு ஆண்டு காலத்தில், ஒதுக்கப்பட்டமக்களின் நலனுக்காகவும், ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள், பழங்குடி மக்கள் வாழும் பிரதேசங்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காகவும் செலவழிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 20 கோடியாகும்.

இது என்ன 'மாதிரி' திட்டமோ?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்க ஒரு நிபுணர் குழுவை அமைத்துள்ளது இந்திய சர்க்கார்.

அந்தக் குழுவில் அந்நிய நாட்டவர்கள் ஏழு பேர் இருக்கின்றனர். இதில் ஒருவர் போலண்டுக்காரர்; மற்ற ஆறு பேரும் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த கம்யூனிஸ்டுகள்.

அக்குழுவில் அங்கம் வகிக்கும் இரும்புத் திரை நாட்டவர் விபரம் வருமாறு:—

டாக்டர் எம். ஐ ரூபின்ஸ்டின், அக்காடமிசியன், டி. டி. டெக்கியார், பிலிமினேவ், பி. எம். மாஸ்க்வின், டிம் செவ்கோ, ஐ. ஒய். பிசாரேவ்.

மற்றொரு போலந்துக்காரரின் பெயர் ஆஸ்கார்லேங்.

இவர்கள் அல்லாது பிரான்சு நாட்டின் பிரபல கம்யூனிஸ்டான புரோபசர்சார்லஸ் பெத்தல்ஹிம் என்பவர்தான் இக்குழுவிற்குத் தானாக விளங்குவதாகத் தெரிய வருகிறது

இந்தக் குழுவின் வேலைகள் நடந்து வரும் காரியாலயத்திற்கு, பிரபல கம்யூனிஸ்டு திருமதி கல்பனா தத் அவர்கள்தான் காரியதரிசியாம்.

திரு. ஜெயப்பிரகாஷ் அவர்கள் லக்ஷ்மணபுரியில் ஒரு நிருபர் கூட்டத்தில் பேசும்போது இதுபற்றி குறிப்பிட்டு, ஒரு ஜனநாயக நாட்டிற்கு போடப்படும் ஐந்தாண்டுத் திட்டத்தை சர்வாதிகார நாட்டைச் சேர்ந்தவர்கள் உருவாக்கினால் அது எவ்விதம் ஜனநாயக நாட்டிற்கு உதவி செய்யும்? அல்லது பொருத்தமாக இருக்கும்?' என்று கேட்டிருந்தார்.

இந்த அறிக்கை சென்னையிலிருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலுமே பிரசுரிக்கப்படவில்லை.

இந்த விஷயத்தை எடுத்துக் காட்டிய பிறகுதான், நேருவே வாய்திறந்து சமாதானம் கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு தினங்களுக்கு முன்பு, பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசும்போது நேரு அவர்கள் இந்த விஷயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர், நிபுணர் கமிட்டியில் ரஷ்யர்களும், பிரபல கம்யூனிஸ்டுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதை மறுக்கவில்லை; ஆனால், 'திட்டம், கம்யூனிஸ்டு தன்மை வாய்ந்ததாக இருக்கும்,' என்பதை மட்டும் மறுத்துக் கூறியுள்ளார்.

—'சோஷலிஸ்ட்'

திரு-தமிழர்களைத் தாக்கிய போலீஸ் அதிகாரிகளுக்குப் பரிசும் - பாராட்டும்

கூட்டு சேர்ந்தபொழுது கொடுத்த வாக்கு காற்றில் பறக்கிறது

பட்டத்தை நல்லவராக்கிவிட்டார் பனம்பள்ளி

பனம்பள்ளி போக்கு கண்டு திரு-கொச்சி தமிழ்நாடு காங்கிரஸ் சீற்றம்

திருவனந்தபுரம், ஜூன் 6—

திரு—கொச்சி மாநிலத்தின் தென் தாலுக்காக்களில் உள்ள சில போலீஸ் அதிகாரிகளுக்கு வெகுமானங்கள் வழங்கியதின் மூலம் திரு—கொச்சி மாநில போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் தம்முடைய அதிகாரத்தைத் 'துஷ்பிரயோகம்' செய்தார் என்று தி. த. நா. காங்கிரஸ் கட்சியின் மகாசபை தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

சென்ற ஆண்டில் நடைபெற்ற திரு—தமிழக இணைப்பு அறப்போரின்போது, திரு—தமிழக மக்கள், எந்த போலீஸ் அதிகாரிகளையெல்லாம் போலீஸ் அக்கிரமச் செயல்களில் முக்கியமாக ஈடுபட்டு பங்குகொண்டவர்கள் என்று புகார் கூறியுள்ளனரோ அந்தப் போலீஸ் அதிகாரிகளுக்கெல்லாம் அவர் வெகுமானங்கள் வழங்கியிருக்கிறார் என்று அத்தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

'போலீசாரின் அக்கிரமச் செயல்கள் பற்றி விசாரணை நடத்தப்பெறும்,' என்று மாநில முதலமைச்சர் சட்டசபையில் தெரிவித்திருக்கிற அதே நேரத்தில் கடும் நடவடிக்கைகளில் முக்கிய பங்கேற்ற போலீஸ் அதிகாரிகளுக்கு வெகுமானங்கள் வழங்கப்படுகின்ற செய்தி மிக்க வியப்பளிப்பதாகவே இருக்கிறது என்று அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தகைய காரணங்களால் உடனடியாக திரு—கொச்சி மாநில போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலை மாற்றிவிடுமாறு இந்திய சர்க்காரிடம் கோருவதெனவும் அக்கூட்டத்தில் முடிவு கட்டப்பட்டிருக்கிறது.

"திரு—தமிழக இணைப்புப் போராட்டத்தையொட்டிய வழக்குகளெல்லாம் தற்போது விசாரணையிலிருந்து வருகின்றபோது இத்தகைய வெகுமானங்கள் வழங்கப்பட்டதில் எப்படியும், ஒரு அரசியல் 'முக்கியத்துவம்' இருக்கிறது என்றேதான் நினைக்க வேண்டியிருக்கிறது," என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

★

மக்கள் கொதிப்பு

நாகர்கோவில், ஜூன் 6—

திரு-தமிழக போராட்டத்தின் போதும், அதற்குப் பின்னரும் திரு-தமிழகமெங்கும் சேவை செய்த போலீஸ் அதிகாரிகளுக்கும், கான்ஸ்டபிள்களுக்கும் பரிசுகள் வழங்கியது சம்பந்தமாக சென்னை மாநிலமெங்கிலுமுள்ள மக்கள் கொதிப்படைந்துள்ளதாக திரு. குஞ்சன் நாடார் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளாராம்.

தொழிலாளர்களுக்கு 8-மாத போனஸ்!

திருச்சிராப்பள்ளி மில்ஸ் லிமிடெட், தனது ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1951-ம் ஆண்டிற்கான 8 மாத அடிப்படைச் சம்பளத்தையோ அல்லது, அந்த ஆண்டில் தொழிலாளரின் மொத்த அடிப்படை ஊதியத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கையோ போனசாக வழங்கவேண்டும் என்று தொழில் தகராறு அப்பீல் நீதி மன்றம் உத்திரவிட்டிருப்பதாகதெரிகிறது.

8 மாத அடிப்படைச் சம்பளத்தைப் போனசாகக் கொடுக்க வேண்டுமென்று தொழில் தகராறு அப்பீல் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பது இதுவே முதன் முறை என்றும், இதற்கு முன்னர், இவ்வளவு உயர்ந்த தொகைக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டதே கிடையாது என்றும் தெரிகிறது.

சமுதாய நலத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தி, தேசிய விஸ்தரிப்பு சேவைத் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ், 1954 செப்டம்பர் மாதம் வரை திருத்திப் பண்படுத்தப்பட்ட நிலங்களின் பரப்பளவு 2,70,987 ஏக்கராவாகும்.

கோவா விடுதலைப் போர்

ஆச்சாரியா கிருபளானி, அருணா ஆசப் அலி 10,000 தொண்டர்களுடன் கலந்துகொள்வர்?

போர்ச்சுகீசியரின் ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்துவரும் கோவாவை விடுதலை செய்வதற்காகத் தற்போது நடைபெற்றுவருகின்ற விடுதலை இயக்கம் முக்கியமான ஒரு கட்டத்தை அடையுமானால், இந்திய யூனியனிலுள்ள பிரபல அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் சுமார் 10,000-த்திற்கு மேற்பட்ட விடுதலை இயக்கத் தொண்டர்களையாவது கோவாவிற்குள் நடத்திச் செல்வார்கள் என்று பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. தொண்டர்களை நடத்திச் செல்லும் பணியில் ஆச்சாரியா கிருபளானியும், அருணா ஆசப் அலியும் முக்கிய இடம் பெறுவர் என்றும் கூறப்படுகிறது.

நேரு தெளிவுரை!

"போர்ச்சுகீசிய ஆதிக்கத்திலிருந்து கோவாவை விடுவிக்க இந்திய சர்க்கார் போலீஸ் நடவடிக்கைகள் எடுக்கும் என்றோ, அல்லது வேறெந்தவிதமான பலாத்கார நடவடிக்கைகளிலும் இறங்குவார்களென்றோ நினைப்பது தவறாகும்.

"வெளிநாடுகளுடன் சம்பந்தப்பட்ட தனது பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துக் கொள்ளுவதில் இந்தியா சண்டையிடாது; வெளிநாடுகள் என்று சொல்லும்போது, பாகிஸ்தான், இலங்கை, போர்ச்சுகல் ஆகிய எல்லா நாடுகளையும்தான் குறிப்பிடுகிறேன்—அந்த வெளிநாடுகளுடன் சம்மந்தப்பட்ட தனது பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துக்கொள்ள இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கை ஒன்றேதான். பாகிஸ்தானுடனும், இலங்கையுடனும் இந்தியாவிற்கு கருத்து வேற்றுமைகள் இருந்து வருகின்றன என்பது உண்மைதான்; ஆனால் இவற்றையெல்லாம் இந்தியா சமரசப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகவே தீர்த்துக் கொள்ளும். இந்தியா, தனது 'மகத்தான' கொள்கையான சமாதானக் கொள்கையினின்றும் சிறிதும் பிறழாது என்பது நிச்சயம்."

இவ்வாறு, பிரதமர் நேரு பண்டிதர் பூனாவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

அக்கூட்டத்தில் மேலும் அவர் பேசினார்:—

"கோவா பிரச்சினை விரைவில் தீர்த்துவைக்கப்படவேண்டியது அவசியந்தான்; ஆனால் அதற்காக போலீஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்பது அழகல்ல; போலீஸ் நடவடிக்கைகளைப் பற்றி நினைப்பதே சரியல்ல."

இவ்வாறு உரையாற்றிய பண்டித நேரு, மேலும் தொடர்ந்து கோவா சத்தியாக்கிரகிகள்குறித்து குறிப்பிடுகையில் கூறினார்:—

"அடி, மிதி அனைத்தையும் சத்தியாக்கிரகிகள் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். தாங்கள் அடிக்கப்படும்போது தங்களுக்கு உதவிக்காகத் துருப்புகள் உதவியைக் கேட்பார்களேயானால் அவர்கள் உண்மையான சத்தியாக்கிரகிகளே அல்ல.

"சத்தியாக்கிரகிகளை கோவா போலீசார் மிருகத்தனமாக நடத்துகிறார்கள். தங்களிடையே நிலவும் பயத்தின் காரணத்தால்தான் அவர்கள் நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளையெல்லாம் சுட்டுப் பொசுக்குகிறார்கள்;

"பெரும் ஏகாதிபத்தியமான பிரிட்டனையே நாம் 'சாத்வீகப் போரி'ன் மூலம் எதிர்த்து வெற்றி பெற்றோம்; அப்படிப்பட்ட நமக்கு போர்ச்சுகீசியர்கள் 'பெரிய' எதிரிகளாகமாட்டார்கள்."

தொடர்ந்து அவர் பேசுகையில், கோவா இந்தியாவின் ஒருபகுதியே என்பது மறுக்கப்பட முடியாத உண்மையென்றும், அங்கு சென்று சத்தியாக்கிரகம் நடத்த இந்தியருக்கு உரிமையுண்டென்பதைத் தாம் ஒப்புவதாகவும், ஆயினும் இந்த சத்தியாக்கிரகத்தில் கோவா மக்களே முன்னணியில் நிற்கவேண்டும் என்றும் கூறினார்.

"தனது ஆட்சியின் கீழ் கோவா மக்கள் சந்தோஷமாகவே இருந்து வருவதாகவும், இந்தியா தான் அவர்களது விருப்பத்திற்கு எதிராகப் பிரிக்க முயன்றகொண்டிருப்பதாகவும் போர்ச்சுகீசிய சர்க்கார் அகில உலகிலும் கூற முன்வந்திருக்கிறது," என்றும் நேரு குறிப்பிட்டார்.

காந்தியார் நூல்கள்

தமிழில் வெளியிட அங்கீகாரம்

கோவை, ஜூன் 5—

காந்தியார் எழுதிய நூல்கள் அனைத்தையும் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துப்புத்தகமாகசுமார் 10 பாகங்களில் வெளியிட 'காந்தி ஸ்மாரக் நிதி' அங்கீகாரம் அளித்திருப்பதாக திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் அவர்கள், கோவைக் கருகில் சிங்காநல்லூர் எனுமிடத்தில் கஸ்தூரிபா காந்தி தேசீய ஞாபகார்த்த டிரஸ்ட் பிரசவ மருத்துவ மனையின் புதிய கட்டிடம் ஒன்றின் திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"காந்தியாரின் நூல்களனைத்தையும் தமிழில் மொழி பெயர்த்துப் புத்தகமாக வெளியிட சுமார் $2\frac{1}{2}$ லட்சம் செலவாகலாம். அந்த நூல்கள் இன்னும் இந்தி, குஜராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்கூட மொழி பெயர்க்கப்படாதது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது; எனவே, காந்தியாரின் நூல்களை முதன் முறையாக—முற்றுமாகத் தொகுத்து வெளியிடும் பெருமை தமிழ் மொழிக்கே இருக்கும்."

தானே இயங்கும் பூரண டெலிபோன் சாதனம் மொத்தம் 539 பாகங்களைக் கொண்டதாகும், இவற்றில், மொத்தம் 520 பாகங்கள் பெங்களூரில் உள்ள இந்திய டெலிபோன் தொழிற்சாலையில் இப்பொழுது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

தூத்துக்குடியில் பொதுச்செயலாளர்

வரவேற்பு தந்த கழகங்கள்

29—5—55-ல், தூத்துக்குடிக்கு வருகைதந்த பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, இரயில் நிலையத்திலும், ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும், கீழ்க்கண்ட கழகங்கள் மலர் மாலைகளும், கைத்தறி துண்டுகளும் அணிவித்து வரவேற்றன:—

நெல்லை மாவட்ட தி. மு. கழகம், தூத்துக்குடி நகர தி. மு. கழகம், மக்கள் மறுமலர்ச்சி மன்றம், மஜீத் மன்றம், மஜீத் கால் பந்தாட்டக் கழகம், புதுக்கோட்டை தி மு. கழகம், திசையன்விளை தி. மு. கழகம், குளத்தூர் தி. மு. கழகம், பன்னீர் செல்வம் கழகம், சௌந்திரபாண்டியன் ஞாபகார்த்த கழகம், மேலச்சண்முகபுரம் தி. மு. கழகம், தருவைகுளம் தி. மு. கழகம், கடல் தொழிலாளர் கழகம், வீர வ. உ. சி. கழகம், கிருஷ்ணராஜபுரம் தி. மு. கழகம், வி. வி. தனுஷ்கோடி நினைவு மன்றம், தி. மு. க. பெண்கள் கழகம், வடக்கூர் தி. மு. கழகம், தூத்துக்குடி கலைமன்றம், ஆதித் திராவிட ஐக்கிய கலா மன்றம், நெடுஞ்செழியன் மன்றம், தி. மு. க. இளைஞர் மன்றம், கீழ சண்முகபுரம் தி. மு கழகம், மு. கருணாநிதி வாசகசாலை, கீழூர் தி. மு கழகம், மாப்பிள்ளை யூரணி தி. மு. கழகம், சுப்பிரமணியபுரம் தி.மு. கழகம், டூவிபுரம் கலைக் கழகம், மாணவர் தி. மு கழகம், திராவிட வர்த்தக தொழிலாளர் கழகம், எஸ். பி. பி. ஜின் பாக்டரி தி. மு கழக தொழிலாளர்கள், போல்நாய்க்கன்பேட்டை தி. மு. கழகம், மேலூர் தி. மு. கழகம், ரட்சண்யபுரம் நாடக மன்றம், மூன்றும் மைல் தி. மு. கழகம், பஜார் தி. மு. கழகம்—ஆகிய பொது நிறுவனங்களும், நூற்றுக்கு மேற்பட்ட தனிப்பட்ட தோழர்களும் மாலையணிவித்தனர்.

மேலைநாட்டு பத்திரிகையாளருக்கு குருஷ்சேவ் அழைப்பு!

"நீங்கள் எல்லோரும் ரஷ்யாவிற்கு வாருங்கள்; நாளையே வாருங்கள்; உங்கள் எல்லோரையும் நான் அழைக்கிறேன்," என்று, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் நிகிதா குருஷ்சேவ் எல்லா நாட்டு பத்திரிகையாளரையும் அழைத்ததாகத் தெரிகிறது.

யூகோ நாட்டில் நடைபெற்ற விருந்தொன்றில் கலந்துகொண்டுவிட்டு திரும்புகையில், அங்கிருந்த பத்திரிகையாளரைக் கண்டதும், உடன்வந்துகொண்டிருந்த யூகோ தலைவர்களிடம், 'பத்திரிகையாளர்கள் ஆபத்தான பேர்வழிகள்; ஆனால், அவர்களுக்கு ரஷ்யர்களாகிய எங்களைப் பற்றித் தெரியாது,' என்று குருஷ்சேவ் கூறினாராம்.

உடனே ஒரு அமெரிக்கப் பத்திரிகையாளர், 'எங்களால் எப்படி முடியும்? நாங்கள்தான் ரஷ்யாவிற்குள் வரமுடியாதே?' என்று கூறினாராம்.

நிகிதா குருஷ்சேவ் இதைக் கேட்டு, அருகிலிருந்த சோவியத் உதவிப் பிரதமர் அனஸ்தாஸ் மிகோயனை எதிட்டுப் பார்த்தாராம்; அவர் 'விசா'க்கள் கிடைக்காததினால் அவர்கள் வரமுடியாமலிருக்கலாம்—என்று குறிப்பிட்டாராம்.

உடனே குருஷ்சேவ் பத்திரிகையாளரைப் பார்த்து, "நீங்கள் எல்லோரும் ரஷ்யாவிற்கு வாருங்கள்; நாளையே வாருங்கள்; நான் அழைக்கிறேன்; யார் விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் வரலாம்," என்று கூறியிருக்கிறார்.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர், "நான் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்தவன்; நான் வரலாமா?" என்று கேட்டாராம்.

உடனே குருஷ்சேவ், "தாராளமாக! நீங்கள்கூட வரலாம்! நான் சாத்தானுக்குக்கூட பயப்படுவதில்லை!" என்று பதில் தந்தாராம்.

இதற்கிடையில் முன்பாக நடந்துகொண்டிருந்த மார்ஷல் டிட்டோவும், இதாரும் அங்கே வந்து, "என்ன வாருங்கள், குருஷ்சேவ்! உங்களை அந்தப் பத்திரிகையாளர்கள் கைதிபோல பிடித்துக் கொண்டிருக்க அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்களே!" என்று செல்லமாகக் கடிந்துகொண்டு அவரை அழைத்துச்சென்றனராம்.

திருமணங்கள்

26—5—55-ல், கலங்காணியில், (சேலம் மாவட்டம்) திரு. கே. எம். உலகப்பன் தலைமையில், தோழர் டி. குப்புசாமி—தோழியர் அம்மாக்கண்ணு திருமணம் சீர்திருத்த முறையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், இரா. சண்முகம், சிவப்பிரகாசம், ஈ. ஆர். கிருஷ்ணன், கௌசிகன் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்கினர். இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப் பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

* * *

1—6—55 இரவு 7 மணிக்கு சாத்தான்குளம் தோழர் அ. பசங்கிளி—தோழியர் ஜெயக்கனி சீர்திருத்தத் திருமணம் தோழர் கே. சேர்மத்துரை தலைமையில் நடைபெற்றது. தோழர் விசு. காசி 'சீர்திருத்தத் திருமணம்' பற்றிப் பேசினார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது— வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

26—5—55ல், திருப்பத்தூர் மு. சண்முகம் புதல்வர் தோழர் சொக்கலிங்கத்திற்கும் — திருச்சிராப்பள்ளி சி.த. சாம்பசிவம் அவர்கள் புதல்வி தோழியர் சுலோசனாவுக்கும் தென்மாப்பட்டு தோழர் ஆ. மு. மருதப்பா தலைமையில் மணமகன் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. ஆசிரியர் முருகையா 'திருந்திய திருமணம்' என்னும்பொருள்பற்றி பேசினார். கழகங்கள், படிப்பகங்கள் சார்பில் வாழ்த்து இதழ்களும், நண்பர்கள் பரிசுகளும் வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

அன்பளிப்புகள்

சென்னை 3-வது வட்ட தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தின் போது நடைபெற்ற திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1/ அளித்தனர்—வரப்பெறறோம் — நன்றி — பொறுப்பாளர்.

* * *

1—6—55ல், மன்னார்குடியில் நடைபெற்ற திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சி கருதி ரூ. 10 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் —நன்றி—பொறுப்பாளர்.

* * *

1—6—55ல் உள்ளிக்கோட்டையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2/ அன்பளிப்பாக வழங்கப்பட்டது-வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

, மகாதேவபட்டினம் தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2/ அன்பளிப்பாகத் தந்தனர்—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பெயர் சூட்டல்

26-5-55 காலை 8-மணிக்கு பொத்தனூர் தோழர் இரா. சண்முகம்—தோழியர் விசாலாட்சி தம்பதிகளின் பெண் குழந்தைக்கு தோழர் அன்பழகன் அவர்கள் 'அன்புச் செல்வி' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது— வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஈ. வெ. கி. சம்பத் அரசியல் விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நியாயம் பற்றிப் பேசிப் பயனில்லை; நமக்கு வேண்டிய இடத்தை நாம் பெற்றுக்கொள்ள, நம்மால் ஆனவைகளை நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்; அவ்வளவுதான்!

"வடவருக்கும் நமக்கும் எப்போது சொந்தம்?—அவர்கள் யார், நாம் யார்?—என்ற விளக்கங்களை இப்போது கூறிக்கொண்டிருக்கிறோம்; இரண்டு பேரும் வேறொருவனிடத்தில் அடிபட்டுக்கொண்டிருந்தபோதுதான் சொந்தமே ஏற்பட்டது; அடித்துக்கொண்டிருந்தவன் வெளியேறிவிட்ட பிறகும் சொந்தம் நீடிக்க வேண்டும் என்கிறார்கள், வடநாட்டவர். அவன் கையாண்ட வழிவகைகளை தொடர் சித்திரமாக்க நினைக்கின்றனர்.

"திருடன் ஒருவன் எதிர்ப்பட்டு, 'என்ன வைத்திருக்கிறாய்?' என்று கேட்கிறான்—'திருடுவது தவறு,' என்பது விளங்காதவனல்ல, அவன்; விளங்கிக்கொண்டவன்தான்; பேராசையினால், நம்மிடம் இருக்கும் பொருளைத் தட்டிப்பறிக்க எண்ணி வழிமறிக்கிறான்; நாம், திருடனிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொண்டால் மட்டும் போதாது; அந்தத் திருடனுக்கு, 'இனி வேறொருவனிடம் திருட வேண்டும்,' என்ற எண்ணமே தோன்றாதவாறு அவனுக்குப் பாடம் கற்பித்தாக வேண்டும்.

"அந்த நாட்களில் இரு வகையான ஆட்சிதான் உண்டு—'நல்ல ஆட்சி; கெட்ட ஆட்சி'—ஆனால், இன்று பலவகையான ஆட்சிகள் உண்டு; அந்த வகையில் ஒரு வகையான 'தாசர்'கள் ஆட்சிதான் இப்போது சென்னை மாநிலத்தை ஆட்சி புரியும் காமராசர் ஆட்சி. நான், சென்னை சர்க்கார் ஆட்சியை, 'தாசர்கள் ஆட்சி' என்று, நூற்றுக்கு நூறு—இலக்கண சுத்தமாக நிரூபிக்க முடியும்.

"விவசாயப் பண்டங்களின் விலை வீழ்ச்சி, விவசாயிகளின் கடன் தொல்லை—இப்படிப்பட்ட பிரச்சினைகளா? வடநாட்டிற்குக் காவடி எடுக்கிறார்கள்.

"'வாரங்கள்' கொண்டாடுவது—ஒரு பிரச்சினையை ஆட்சியிலிருப்போருக்கு உணர்த்த, வற்புறுத்த இதரர்கள் மேற்கொள்ளும் முயற்சியாகும்; ஆனால், சென்னை சர்க்கார் 'கைத்தறி வாரம்' கொண்டாடுகிறார்கள்; உத்தரவிடவேண்டிய அவர்களே விண்ணப்பம் போடுகிறார்கள்; இது கைத்தறி பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதில் சென்னை சர்க்காரின் கையாலாகாத்தனத்தைத்தானே எடுத்துக் காட்டுகிறது? அந்தப் பிரச்சினைக்கான பரிகாரம் தேடுவதற்கான முழு உரிமையும் சென்னை சர்க்காரிடம் இல்லை.

"அப்படியானால், இந்த இலட்சணத்தில் இருக்கும் ஒரு ஆட்சியை 'தாசர்கள் ஆட்சி' என்று கூறாமல் வேறெப்படி கூறுவது? வடநாட்டு சர்க்காருக்கு வரி வசூலித்துத் தரவும், அவர்கள் சொற்படி தலையாட்டவும் இருக்கிற ஆட்சிதானே சென்னை சர்க்கார் ஆட்சி?

"அரசியல் தெரிந்தவர்களைக் கேட்கிறேன்—சென்னையில் ஒரு கவர்னர் இருப்பது எந்த ஜனநாயக மரபை ஒட்டியது? உலகத்தில் விடுதலை பெற்ற நாடுகள் பல இருக்கின்றனவே, அங்கெல்லாம், இங்கிருப்பதைப் போன்ற கவர்னர் இருக்கின்றரா? இங்கிலாந்திலோ, ரஷ்யாவிலோ உண்டா? அமெரிக்காவில் உண்டு; ஆனால், ஐசனோவரால் நியமிக்கப்பட்டவர்களல்லர்; 48 மாநிலங்களிலும் உள்ள மக்கள், அந்த அந்த மாநிலத்திற்கான கவர்னர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்; ஆனால், இங்கு, பிரகாசா, இராசேந்திரபிரசாத்தால் நியமிக்கப்பட்டல்லவா இருக்கிறார்? இந்த 'முறை தவறிய' முரண்பாடு, வேறெந்த நாட்டு அரசியலில் இருக்கிறது?

"இப்படி நியமனம் பெறுகிற மக்களுடன் தொடர்பில்லாத கவர்னர், கையெழுத்திட்டால்தான், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளடங்கிய சபையின் முடிவுகள் அமுல் செய்யப்பட வேண்டும் என்றிருப்பது, எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது?

"இந்த நிலையில், இந்த நாட்டு மக்களான திராவிடர்கள், வடநாட்டவரால் ஆளப்படுகிறார்கள்; அந்த வடநாட்டு ஆட்சியாளருக்கு 'சேவா சிம்மங்'களாக—எடுபிடிகளாக இந்த நாட்டில் சிலர் இருக்கின்றனர்; இந்த எடுபிடிகளின் பிடியிலிருந்தும், வடவர்களின் பிடியிலிருந்தும், திராவிடர்கள் மீளுவதற்கு வழி என்ன என்பதை திருச்சியில் கூடும் மாநில மாநாடு முடிவு செய்யும்.

"அந்த முடிவு, ஒரு பெரும் ஜனநாயக அடிப்படையில் எடுக்கப்படும்—என்று, நமது அண்ணா அவர்கள் சென்ற வாரம் அறிவித்தார்கள்; எந்தக் கட்சிக்குவரும் இந்தத் துணிவு—இந்த நாட்டில்?

"கம்யூனிஸ்டுகள் மாநாடு—மக்களுக்கும், மாநாட்டிற்கும் சம்மந்தமிருக்காது; காங்கிரஸ் மாநாடும் அப்படியே; ஆனால் நமது மாநாடு?

"நாம் நடத்தும் மாநாடு மேற்கொள்ளும் ஜனநாயக ரீதியான முடிவுகள், இந்தத் தென்னாட்டின் அரசியல் வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தைத் துவக்கும்; அந்த அத்தியாயம், இந்த நாட்டு மக்களுக்கான ஆட்சி அமைப்பதைப் பற்றியதாயிருக்கும்,"

—என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 5—6—55 அன்று காலை சென்னை கோகலே மண்டபத்தில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

[சொற்பொழிவின் மற்ற பகுதிகள் நாளைய இதழில் வெளிவரும்]

முன்னாள் பொதுச்செயலாளர்

அண்ணாதுரை அவர்கள் வருகை

★

முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களிடம், தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதி வசூலாகியுள்ள தொகையைப் பொதுக்கூட்டத்தில் கொடுக்க விரும்புவதாயும், தங்கள் மாவட்டத்தில் உடனடியாக சுற்றுப்பிரயாணம் செய்ய தேதி தரும்படியும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்; மிகவும் மகிழ்ச்சி.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அன்புடன் வாக்களித்தபடி நிதி வசூல் செய்திருக்கும் தொகையை உடனே பொதுச் செயலாளர் அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைத்து தோழர்கள் கடிதம் எழுதினால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு நாட்களுக்கு சுற்றுப் பிரயாண நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தி வெளியிடப்படும்.

தனித்தனி ஊர்கட்கு தோழர்கள் அழைப்புகள் அனுப்பாமல், தங்கள் மாவட்ட செயலாளருடன் கலந்து பேசி பொதுக்கூட்ட ஏற்பாடுகளைச் செய்க—மாவட்டச் செயலாளர் அவர்கள் மூலம் இங்கு செய்தி அனுப்ப வேண்டுகின்றோம்.

ஜூலை மாதம் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் ஆரம்பமாகலாம்.

இராயபுரம், சென்னை-13 7—6—'55.	—பொறுப்பாளர், தி. மு. கழகம், தலைமை நிலையம்

அலியாறு திட்டம்:

ரூ. 180 லட்சம் செலவிடப்படும்

கோவை மாவட்டத்தில் சுமார் 5000 ஏக்கருக்குப் பாசன வசதி தரக் கூடிய அலியாறு திட்டத்தை சென்னை சர்க்கார் 'சர்வே' பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இத்திட்டத்திற்காகும் செலவு ரூ. 180 லட்சம் என்று கூறப்படுகிறது.

அலியாறு திரு-கொச்சி மாநிலத்தில் துவங்குகிறது. இந்த ஆற்றில் பொள்ளாச்சி—ஆனைமலை சாலையில் சாணதுறை எனுமிடத்திற்குச் சுமார் 1 மைல் தூரத்தில் சென்னை மாநிலத்தின் பக்கம் அணைகட்டுவதென்பதே திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஆற்றுப் பாசனத்தால் திரு-கொச்சி மாநிலத்தில் 20,000 ஏக்கரும், சென்னை மாநிலத்தில் 6,000 ஏக்கரும் நீர்ப்பாசன வசதி பெறுகின்றனவாம்.

பதவி ஏற்றனர்!

டாக்கா, ஜூன் 6—

கிழக்கு வங்க மாநிலத்தில் அபு உசேன் சர்க்கார் தலைமையில் 5 பேரடங்கிய ஐக்கிய முன்னணி மந்திரிசபை பதவி ஏற்றிருக்கிறது.

இந்த ஐவரும் கி. வங்க ஐக்கிய முன்னணித் தலைவரான பஸ்லுல் ஹக்கின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களென்றும், இவர்களனைவரும் ஹக்கின் கிருஷக் ஸ்ரமிக் கட்சியைச் சேர்ந்தவர்களெனவும் கூறப்படுகிறது.

சொற் பயிற்சிக் கூட்டம்

8—6—55 மாலை 6 மணிக்கு, சென்னை 5-வது வட்ட தி. மு. கழக இல்லில், தோழர் ஜெகன்னாதன் தலைமையில், 'இலட்சிய வீரர்கள்' என்ற பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதி

★

திருச்சியில் நடைபெறப்போகும் மாநில மாநாட்டு நிதிக்கு நன்கொடை, வரவேற்புக் கட்டணத் தொகை அனுப்பி வைக்கும் தோழர்கள், காஞ்சிபுரத்திற்கும், சென்னைக்கும் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைக்காமல், "பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தலைமை தி. மு. கழகம், 'அறிவகம்' இராயபுரம், சென்னை-13"—என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

சென்னை-13 7—6—'55.	பொறுப்பாளர், 'நம் நாடு.'

இவ்வாண்டு இறுதிக்குள்!

மாநிலம் முழுமையிலும் 2,000 குழாய்க் கிணறுகள்

சென்ற 1953-ஜூன் திங்களில் 2,000 குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கென தயாரிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 30-ந் தேதியுடன் முடிய 1,700 குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன; இவற்றுள் 1,500 கிணறுகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

1,316 கிணறுகளில் ஏற்கனவே பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டு டிசம்பர் திங்கள் இறுதியுடன் இத்திட்டம் முடிவுற வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது. தற்போது மாதம் ஒன்றுக்கு 75 கிணறுகள் வீதம் அமைக்கப்பட்டு வருகின்ற வேகத்தைக் கணக்கிடுகையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள்ளாகத் திட்டம் பூர்த்தியடையுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

1954-ம் ஆண்டில், நவம்பர் திங்களில், 650 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கெனதயாரிக்கப்பட்ட இரண்டாவது திட்டத்தின் கீழ் இதுவரையிலும் 291 கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன; 254 கிணறுகள் அபிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன; 199 கிணறுகளில் பம்பு செட்டுகளும் பொருத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முடிவு காலம் 1956 ஜனவரி திங்களெனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்திய—அமெரிக்கத் தொழில் நுணுக்க உதவித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்ற மேற்கண்ட இந்த இரண்டு திட்டங்களையும் தவிர்த்து, இந்திய சர்க்கார் தனது உணவுப் பெருக்கத் திட்டத்தின் கீழ் மேலும் 700 குழாய்க் கிணறுகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாம்.

இத்திட்டத்திற்கான வேலைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரையிலும் சுமார் 56 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆந்திர காங்கிரஸ் தலைவர் தேர்தல்

விஜயவாடா, ஜூன் 4—

ஆந்திர பிரதேசக் காங்கிரசின் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட என். ஜி. ரங்கா 20 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அல்லூரி சத்தியநாராயண ராஜூவிற்கு 92 வாக்குகளும், என். ஜி. ரங்காவிற்கு 72 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. பெரும்பான்மை வாக்குகள் பெற்ற சத்திய நாராயணராஜூ ஆந்திர பிரதேசக் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

பாலாறுதண்ணீர் தகராறு

கூட்டுப் பரிசீலனைக்கு விடப்படுமாம்

பாலாறு தண்ணீர் விநியோகம் குறித்து, மைசூர்—சென்னை மாநிலங்களுக்கிடையே எழுந்துள்ள தகராறைப் பற்றி சென்னை பிரதம எஞ்சினீயரும், மைசூர் பிரதம எஞ்சினீயரும் நடத்த இருக்கும் கூட்டுப் பரிசீலனையில் கலந்து கொள்ள ஒரு பெரிய அதிகாரியை மத்திய சர்க்கார் நியமித்துள்ளதாகத் தெரிகிறது.

★

கடலில் கலக்கும் நதித் தண்ணீரை பயன்படுத்த!

திரு—கொச்சி மாநிலத்தினூடே பாய்ந்து மேற்குக் கடலில் சங்கமமாகும் ஆறுகளின் தண்ணீரைக் கூட்டாகப் பயன்படுத்திக் கொள்வதற்கென சென்னை — திரு — கொச்சி ஆகிய இரு மாநில சர்க்கார்களுக்கிடையேயும் இத்திங்கள் 14-ந் தேதி, சென்னையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக திரு-கொச்சி மாநில முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்தமேனன் சென்னைக்கு வர இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

★

சென்னை நிதியமைச்சர் தகவல்

"திரு—கொச்சி மாநில நதிகளின் உபரி தண்ணீரை, தமிழ் நாட்டின் மாவட்டங்களுக்கு பயன்படுத்தும் வழிவகைகள் காண சென்னை மாநில சர்க்கார் முயற்சித்து வருகிறது," என நிதி அமைச்சர் கூறியுள்ளதாக பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

"ரூ. 36 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள குந்தா நீர் மின்சாரத் திட்டத்திற்கு, திட்டக் குழுவின் அனுமதி எந்த நேரத்திலும் கிடைத்துவிடலாம்," என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

அழைப்பு விடுத்தனர்!

வருகிற ஜூலை திங்கள் 18-ந் தேதி முதல் 21-ந் தேதி வரையிலும் ஜினீவாவில் நான்கு வல்லரசுகள் மாநாட்டை நடத்தலாம் என்று குறிப்பிட்டு, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் ரஷ்யாவிற்கு அழைப்பு விடுத்துள்ளனவாம்.

அறிவிப்பு

'நம் நாடு' தின இதழில் வெளியிடும் செய்திகளை ஆசிரியர் முகவரிக்கும், 'நம் நாடு' இதழுக்கு நன்கொடை, ஏஜெண்டு டிபாசிட் தொகையில் பாக்கித் தொகை, சந்தாவுக்காக அனுப்பப்படும் செக், டிராப்டு, போஸ்டல் ஆர்டர், மணியார்டர் ஆகியவைகளை "பொறுப்பாளர் (மானேஜர்), 'நம் நாடு'" என்றமுகவரிக்கும் எழுதி அனுப்ப வேண்டுகின்றோம். தனிப்பட்டவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு செக், டிராப்டு, மணியார்டர் ஆகியவைகளை அனுப்பாதிருக்க வேண்டுகின்றோம்.

தி. மு. க. தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் கடிதங்கள், மணியார்டர் முதலியவைகளை பொதுச் செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

—பொறுப்பாளர்,
'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம். ஏ.